உ

கடவுள் துணை

# செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௫௨.] மன்மத௵—பங்குனி௴ [பகுதி-௫.

Vol. 52. March–April—1956. No. 5.

உள்ளுறை

மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா: 129

இயற்கைக் காட்சி: 137

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

தமிழர் பொருளாதார வரலாறு: 145

டாக்டர் பெ. நடராசன்

துப்பைக் கோழி: 156

மா. ரா. இளங்கோவன்

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1956.

# "செந்தமிழ்" ஆசிரியர் குழு:

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
   தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செந்நாவலர், ஆ. கார்மேகக்கோனார், மதுரை.

3. டாக்டர். மா. இராசமாணிக்கனார் M. A. M. O. L. L. T Ph. D.
   தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
   தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பணையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
   வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
   செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
   அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
   தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி-௫௨.] மன்மத-ஷு-பங்குனி-மீ [பகுதி-௫.

Vol. 52. March–April—1956. No. 5.

## மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா

சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்
சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனும்
சங்கப் புலவரும் தழைத் தினிதிருந்த
மங்கலப் பாண்டி வளநாட்டின்

தலைநகரான இம்மதுரையில், செந்தமிழ்ச்செல்வச் சேதுவேந்தர் துணைகொண்டு திரு. பொன்-பாண்டித்துரைத்தேவரவர்கள் நிறுவிய இம் மதுரைத் தமிழ்ச் சங்கம், இப்பொழுது ஐம்பத்தைந்தாண்டு நிறைந்துவிளங்குகிறது. ஆகையால் இதற்குப் பொன்விழாக் கொண்டாட வேண்டுமென்று, இதன் துணைத்தலைவர் திரு. பி. டி. இராசன் அவர்கள் உள்ளிட்ட தமிழ்ப்பெருமக்கள் பெரிதும் விரும்பினார்கள். சாதி, சமயம், கட்சி வேறுபாடின்றித் தமிழ்நாட்டவர் எல்லாரையும் ஒன்றுசேர்க்கவல்ல முத்தமிழ்த் திருநாளாக விளங்கவேண்டும் என்பது பலருடைய விருப்பமாக இருந்தது. இதனை ஏழுநாள் பெருவிழாவாக நிகழ்த்துமாறு அவர்கள் அறிக்கைவிடுத்தார்கள். இதன் செலவிற்கென அவர்கள் நன்முயற்சியால் பெரும்பொருள் சேர்ந்தது.

விழாவினைச் சிறப்புற நடத்துவதற்குச் செயற்குழு ஒன்று நியமிக்கப் பெற்றது. மதுரைத் திருவள்ளுவர் கழகத் தலைவர் திரு. கி. பழநியப்பன் அவர்கள் செயலாளராகவும் பலர் அதன் உறுப்பினராகவும் அமைந்தனர், விழாவின் ஒவ்வொருநாளும் இயல், இசை, நாடகம்

என்ற மூன்று தமிழும் முழங்குமாறு அமைந்த அரங்குகள் முறை யாகச் செயல்படுதற்கு ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் திருக்கோயில் ஆடிவீதியில் சித்திரப் பூம்பந்தர் போடப்பட்டது. தமுக்கம் பெருவெளியில் பொருட்காட்சிக்காக அமைக்கப்பட்டிருந்த அமைப்பு தமிழ்ச்சங்கப் பொன் விழாவிற்குப் பயன்படுத்துமாறு நகரவையால் கொடுக்கப்பட்டது. தமிழ்ச்சங்கமாளிகையும் கண்கவர் வனப்புடன் ஓவியக் கலைக்காட்சி நிலையமாய் ஒளி பெற்று விளங்காநின்றது.

உள்ளூரிலும், வெளியூர்களிலும் சிறந்த சொற்பொழிவாளர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அவர்கள் முன்னதாகவே தம் சொற் பொழிவுகளைக் கட்டுரை உருவில் எழுதி உதவினர். தமிழர் நாகரிகம், வரலாறு, கலை, பண்பாடு என்னும் பலதிறப் பொருள்களில் துறை போகிய பேரறிவாளர்கள் வரைந்த ஐம்பத்தாறு கட்டுரைகளால் தேனூறுமாறு, கானூறிதழ்கொண்ட "பொன் விழா மலர்" அச்சுக் கலையின் அழகெலாம் நிரம்பிய புத்தகவடிவில் பூத்துப்பொலிவுற்றது.

1956ஆம் மேமீ 30உ முதல் ஜூன்மீ 5உ வரை ஏழு நாளும் இப்பொன்விழா இனிது கொண்டாடப் பெறுவதாயிற்று. ஒவ்வொரு நாளும் காலையில் இயல் அரங்கும், மாலையில் இசை அரங்கும், இரவில் நாடக அரங்கும் வகுத்துக்கொண்டு, ஒப்புயர்வற்ற நல்வாணர் தம் அறிவாற்றலைப் புலப்படுத்தி, யாவர்க்கும் கண்ணினும், செவியினும் களிபேரின்பம் விளைத்தனர். உள்ளூர் அயலூரிலிருந்து எண்ணில்லாத அன்பர்குழாம் வந்து ஈண்டியது, எல்லோர்க்கும் பொதுமையின் உரிய அரிய பெரிய தமிழ்த்திருநாள் இதுவென மெய்ப்பித்து நின்றது. அரசாங்கத்தார்கூட அலுவலகங்களுக்கு ஒருநாள் விடுமுறை அளித்துச் சிறப்பித்தனர். பொன்விழாத் தொடங்கும் முன்னாள் இரவில் ஸ்ரீமீனாட்சியம்மன் திருவீதிப் புறப்பாடு தமிழ்மறையின் ஓலைச்சுவடி ஊர்வலத்தோடு சிறப்பாக நடந்தேறியது.

மறுநாள் மேமீ 30உ புதன்கிழமை காலை 9-மணிக்குத் தமுக்கம் பெருவெளியில் பலவூர்ப் பெருமக்களும் பரவ வந்து குழுமியிருந்

தனர். புலவரும், புரவலரும் வீற்றிருக்கப் பொருத்தமான மேடையும், அதன் எதிரே திருவள்ளுவர் திருவுருவச் சிலையும் அழகுடன் திகழ்ந்தன.

திருப்பனந்தாளாதீனத் திருப்பெருந்திரு அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அன்று விழாத்தலைவராக அமர்ந்தருளினார்கள். தமிழ் மறை முழக்குடன் கடவுள் வாழ்த்திசை ஒலிப்ப விழா நிகழ்ச்சி இனிது தொடங்கிற்று. அப்பொழுது மேடையில் அமர்ந்திருந்த சென்னை மாநிலப் பொதுச்சீரமைப்புத்துறை அமைச்சரும் மதுரைத் தமிழ்ச் சங்க வாழ்நாள் தலைவருமான உயர்திரு. ஷண்முகராஜேச்வர சேதுபதியவர்கள் வந்திருந்த யாவரையும் வரவேற்று மகிழ்ந்தனர். வரவேற்புக்குழுவின் தலைவரும், தமிழ்ச்சங்கத் துணைத்தலைவருமான தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்களின் வரவேற்புரை நிகழ்ந்தது.

முன்னாள் கவர்னர் ஜெனரலாயிருந்த, பாரதரத்தின சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள் திருவிழாவைத் தொடங்கிவைத்துத் திறப்புரைநிகழ்த்தினார்கள். அதில் அவர்கள் இத்தமிழ்ச்சங்கம் தமிழ்நாட்டின் பொதுவுரிமை என்றும் தமிழ்மக்களிடையே ஒற்றுமை வளரவேண்டுமென்றும், அதன் மேன்மை நாடெங்கும் பரவ யாவரும் நற்பணி புரியவேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள்.

இந்திய இரயில்வேத் துறைத் துணையமைச்சர் திரு. ஓ. வி. அழகேசன் அவர்கள் தமது உரையில் தமிழ்மொழி வளம் குன்றியிருக்கிறதென்றும், புத்தம்புது நூல்களைத் தோற்றுவிக்கவேண்டுமென்றும், தமிழ்வளர்ச்சிக்கு அரசாங்கம் உதவக்கூடுமென்றும் கூறினார். செந்நாப்புலவர், பேராசிரியர், திரு கார்மேகக்கோனாரவர்கள் தமிழ்ச் சங்க வரலாறுபற்றியும், சென்னைப் பல்கலைக்கழகம் வரலாற்றுப் பேராசிரியர், டாக்டர் திரு. கே. கே. பிள்ளையவர்கள் சங்ககாலம் என்பது பற்றியும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வித்துவான் திரு. மு. அருணாசலம்பிள்ளையவர்கள் சிற்றிலக்கியங்கள் என்பது பற்றி

யும், அண்ணாமலைப்பல்கலைக்கழகம் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள் சங்ககால இசை என்பது பற்றியும், அண்ணாமலைப்பல்கலைக்கழகம் திரு. ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் சிற்பக்கலை என்பது பற்றியும்; சேலம் நகரவைக் கல்லூரி திரு. ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் ஒப்பியல் இலக்கணம் என்பது பற்றியும் பேசினார்கள்.

அன்று மாலை 6 மணிக்கு திரு. ஒ. வி. அழகேசன் அவர்கள் தலைமையில், இசையரசு திரு. M. M. தண்டபாணிதேசிகரவர்கள் குழுவினரால் இசையரங்கு நடைபெற்றது. இரவு 10 மணிக்கு, முத்தமிழ்க் கலாவித்துவரத்தினம் திரு. T. K. ஷண்முகம் அவர்கள் தலைமையில், கலைவாணர் திரு. N. S. கிருஷ்ணன் அவர்கள் குழுவினரால் 'தளபதி' நாடகம் நடத்தப்பெற்றது.

இரண்டாம் நாள் இயல் அரங்கு காலை 9 மணிக்கு ஆடிவீதியில் கூடியது. சென்னைப் பயிர்த்தொழிலமைச்சர் திரு. M. பக்தவத்ஸலம் அவர்க்ள் தலைமை தாங்கினர். அவர் தம் நீண்ட சொற்பொழிவின் இடையே மொழி என்பது அதனைப் பேசும் மக்கள் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டதென்றும் தமிழ் அரசாங்க மொழியாகக் கூடுமென்றும், படிப்படியாக இம்மாறுதல் ஏற்படலாமென்றும் அறிவித்தார்.

மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர், திரு. டாக்டர். இராசமாணிக்கனாரவர்கள் சோழர்காலம் என்பது பற்றியும் திரு. ப. ஜிவானந்தம் M. L. A. அவர்கள் தமிழிலக்கியத்தில் கருத்துப் புரட்சி என்பது பற்றியும், திருமதி S. பாகீரதி அம்மாள் தமிழர் காதல் வாழ்வு என்பது பற்றியும், திருவாசகமணி K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் திருக்குறளும் திட்டமும் என்பது பற்றியும், யாழ்ப்பாணம் கலைப்புலவர் திரு. நவரத்தினம் அவர்கள் ஓவியக்கலை என்பது பற்றியும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் திரு. T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள் கல்வெட்டுக்கள் என்பது பற்றியும், திரு. கி. இராமலிங்கனார் M.A. தமிழ் ஆட்சிமொழி என்பது பற்றியும் பேசினார்கள்.

அன்று மாலை 6 மணிக்குத் தமுக்கம் பெருவெளியில் இராஜா ஸர். எம். ஏ. முத்தையாசெட்டியாரவர்கள் தலைமையில் சித்தூர் சுப்பிரமணியபிள்ளை குழுவினரின் இசையரங்கும், இரவு 10 மணிக்குத் திரு. ம. பொ. சிவஞானகிராமணியார் தலைமையில் திரு. கே. ஆர். இராமசாமி குழுவினரால் 'ஓர் இரவு' நாடகமும் இனிது நிகழ்ந்தன.

மூன்றாம் நாள் இயலரங்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. டி. எம். நாராயணசாமிப்பிள்ளையவர்கள் தலைமையில் தொடங்கிற்று. சென்னைக் கவர்னர் திரு. ஸ்ரீ பிரகாசா அவர்கள் தமிழ்ச்சங்கம் தோற்றுவித்த திரு. பொன்-பாண்டித்துரைத்தேவரவர்களின் உருவப்படத்தைத் திறந்துவைத்தார்கள். அவர்கள் வடநாட்டுக் காசியம்பதியினும், தென்னாட்டு மதுரையும் திருச்சியும் தமக்கு அழகுடன் காட்சி அளிக்கின்றன என்றும், தமிழ் மிகச் சிறந்த மொழி என்றும் கூறினார்கள்.

மதுரை லேடி டோக் கல்லூரி திருமதி. தே. தியாகராசனவர்கள் பாண்டியர் என்பது பற்றியும், சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் 'தமிழ்ப்பண்பாடு' என்பது பற்றியும், செல்வி மணிமேகலை, 'சங்க இலக்கியக் கதைகளும் காட்சிகளும்' என்பது பற்றியும், வித்துவான் சித்தாந்த கலாநிதி திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள் 'பழந்தமிழர் சமயம்' என்பது பற்றியும், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. ஜி. சுப்பிரமணியபிள்ளையவர்கள் 'பண்டைய விளையாட்டுகள்' என்பது பற்றியும், அறிஞர் திரு. சி. என். அண்ணாத்துரையவர்கள் 'மேடைப் பேச்சு' என்பது பற்றியும் பேசினர்.

அன்று மாலை தமிழ்மறைக் காவலர், திருக்குறளார் முனிசாமி M. P. அவர்கள் தலைமையில் கானசரசுவதி டி. கே. பட்டம்மாள் குழுவினரால் இசையரங்கும், அறிஞர் சி. என். அண்ணாத்துரையவர்கள் தலைமையில் திரு. எம். ஜி. இராமசசந்திரன் குழுவினரால் 'இன்பக் கனவு' நாடக அரங்கும் நடைபெற்றன.

நான்காம் நாள் விழா திருமதி புஷ்பம் நடராசன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. மதுரை ஆதீனம் சின்னப்பட்டம் திருப்பெருந் திரு சோமசுந்தர தேசிகரவர்கள் பாஸ்கர சேதுபதியவர்கள் படத்தைத் திறந்துவைத்தார்கள்.

தியாகராசர் கல்லூரி திரு. அ. கி. பரந்தாமனாரவர்கள் 'இசைப் புலவர்கள்' என்பது பற்றியும், சென்னை வித்துவான் திரு. பி. ஆர். புருஷோத்தம நாயுடு அவர்கள் 'வைணவம்' என்பது பற்றியும், சென்னை பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் 'தமிழர் பருத்தி வக்கலை' என்பது பற்றியும், சேலம் திருமதி. கு. காமாட்சி குமாரசாமி அம்மையார் 'தமிழக மகளிர்' என்பது பற்றியும், விருதுநகர் திரு. ஏ. எஸ். நாராயணசாமி நாயுடு அவர்கள் 'தமிழர் சமூக வாழ்க்கை' என்பது பற்றியும், போகி. சுத்தானந்தபாரதியாரவர்கள் 'அயல்நாட்டாரின் தமிழ்த்தொண்டு' என்பதுபற்றியும், திரு. டி. கே. ஷண்முகம் அவர்கள் 'திரைப்படங்கள்' என்பதுபற்றியும் பேசினார்கள்.

அன்றுமாலை தமிழ்மறைக் காவலர் திருக்குறள் முனிசாமி எம். பி. அவர்கள் தலைமையில் திருமதி எம். எல். வசந்தகுமாரி குழுவினர் இசைப்பாங்கும், இவ்வு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு என். சோமசுந்தரம் அவர்கள் தலைமையில டி. கே. எஸ். குழுவினரின் 'தமிழ்ச் செல்வம்' நாடக அரங்கும் நடைபெற்றன.

ஐந்தாம்நாள் விழா காவலர், கணக்காயர், டாக்டர் திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. குன்றக்குடி ஆதீனம் தவத்திரு, அருணாசல தேசிக பரமாச்சாரியசுவாமிகள் தமிழ்ச் சங்கமாளிகையில் ஒளிப்பொருட்காட்சியைத் திறந்துவைத்தார்கள். சென்னை நிலவருமானத்துறை அமைச்சர் திரு. எம். ஏ. மாணிக்கவேலு அவர்கள் திரு. டி. ஸி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள் படத்தைத் திறந்துவைத்தார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகம் டாக்டர். திரு. மு. ஆரோக்கியசாமி அவர்கள் 'நாயக்கர் காலம்' என்பது பற்றியும், திரு. மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் 'பௌத்தம்' என்பது பற்றியும், சென்னை திரு. வை. மு. நரசிம்மன் அவர்கள் 'கட்டிடக்கலை' என்பது பற்றியும், சென்னை திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியாரவர்கள் 'மறுமலர்ச்சி உரை நடை' என்பது பற்றியும் பேசினார்கள்.

அன்று மாலை அமைச்சர் எம். ஏ. மாணிக்கவேலு அவர்கள் தலைமையில் சாத்தூர் வில்லிசை வாணர் ச. ப. பிச்சைக்குட்டி குழுவினர் 'தமிழ் வளர்ந்த கதை' (வில்லுப் பாட்டு) இசையரங்கும், இரவு டி. கே. எஸ். நாடகக் குழுவினர் 'இராசராசசோழன்' நாடக அரங்கும் இனிது நிகழ்ந்தன.

ஆறாம் நாள் விழாவன்று காலை இயல் அரங்கு இலங்கை எஸ். நடேசபிள்ளையவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்கள் 'மேடைப் பேச்சு' என்பது பற்றியும், திரு. டாக்டர் எம். எஸ். பூவரணபிள்ளையவர்கள் 'ஆங்கிலேயர் காலம்' என்பது பற்றியும், சென்னை திரு. கா. அப்பாத்துரைப்பிள்ளையவர்கள் 'தமிழ்நாடு இயற்கை வளம்' என்பது பற்றியும், நாகர்கோவில் டாக்டர் பி. நடேசன் அவர்கள் 'தமிழர் பொருளாதாரம்' என்பது பற்றியும், திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் 'தமிழ் நாடகம்' என்பது பற்றியும் பேசினார்கள்.

மாலை விருதுநகர் திருக்குறள் ச. வெள்ளைச்சாமி நாடாரவர்கள் தலைமையில் திருமதி கமலா லட்சுமணன் அவர்கள் நடனமும், இரவு மேடை தளவாய் திரு. குமாரசுவாமி முதலியாரவர்கள் தலைமையில் டி. கே. எஸ். குழுவினர் 'இராசராசசோழன்' நாடகமும் நடைபெற்றன.

ஏழாம் நாள் காலை இயலரங்கு தல்லாகுளம் தமுக்கத்தில் இலங்கை திரு. கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது.

திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியாரவர்கள் 'ஆலயங்களின் அமைப்பு' என்பது பற்றியும், திருச்சி திரு. அகிலாண்டம் அவர்கள் 'மறுமலர்ச்சி சிறுகதைகள்' என்பது பற்றியும், மேரி அரசி கல்லூரி திருமதி. ஆர். இராசாமணியம்மையார் 'தமிழர் ஆடை அணிகள்' என்பது பற்றியும், பெருஞ்சொல் விளக்கனூர் திரு. அ, மு. சரவண முதலியாரவர்கள் 'தமிழர் வீரம்' என்பது பற்றியும், திரு, இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'சங்க கால அரசியல்' என்பது பற்றியும், மதுரை அமெரிக்கன் கல்லூரிப் பேராசிரியர் திரு. பி. சோதிமுத்து அவர்கள் 'கிருத்தவம்' என்பது பற்றியும், சென்னை திரு. பி. தாவுத்சா அவர்கள் 'இசுலாம்' என்பது பற்றியும் பேசினார்கள்.

அன்று மாலை டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் தலைமையில் நாகசுர வித்துவான் திரு. வீருசாமி குழுவினர் இசையரங்கும், குமாரிகள், திருமதி ஜெயா, உமா என்பவர்களின் நடனமும், ஈ. வே. இராமசாமிப்பெரியார் அவர்கள் தலைமையில் டி. கே. எஸ். குழுவின ரின் இராஜராஜசோழன் நாடக அரங்கும் இனிது நிகழ்ந்தன.

எட்டாம் நாள் 6-6-56 அன்று P. ரெங்கசாமிநாயுடு அவர்கள் தலைமையில், மதுரை D S. P. திரு. வெங்கட்ராமன் அவர்களால், தமிழ்ச்சங்கத் தேர்வுகளில் முதன்மையுற்றவர்களுக்கும் விழாவில் வேலைசெய்தவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

இங்ஙனம் மிகவும் வெற்றியுடன் முற்றுப்பெற்று விளங்கியது இப் பொன்விழா. இத்தமிழ்ச்சங்கம் மேன்மேல் ஆக்கம்பெற்று வளர்வதற்கு இஃது ஒரு நல்ல அடிப்படையாகும் என்பதில் ஐய மில்லை.

தமிழ்மொழி வாழ்க ! தமிழ்ச்சங்கம் வாழ்க !!

# இயற்கைக் காட்சி*

:(-:o:-):

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

உலக மக்களின் உயிர் வாழ்க்கை பலபல காட்சிகள் மலிந்த ஒரு நாடகமாகும் என்பது செகப்பிரியர் போன்ற பெரும்புலவர்களின் துணிபாகும். செல்வம் நிறைந்த இன்ப வாழ்வும், அது வொழிந்த துன்ப வாழ்வும் ஆகிய இரண்டும் நாடகங்காணும் மக்கள் கூட்டத்தின் வருகையும் போக்கும் ஒப்பனவாகும் என்பது வள்ளுவர் கருத்து. கடவுள் நெறி மேற்கொண்டு துறவுள்ளத்துடன் வாழும் அடியார்களும் இக் கருத்தினரே யாவர்.

> "நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
> வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்"

என்ற மணிவாசகர் மொழியும், உலக வாழ்வு ஒரு நாடகமாகும் என்னும் கொள்கையை வலியுறுத்துவதாகும். மக்கள் வாழ்வாகிய நாடகம் நிகழ்தற்கு 'இயற்கை' என்னும் மேடை இன்றியமையாததாகும். 'இயற்கை ஆற்றல்' என்னும் துணையின்றி மக்கள் வாழ்வு சிறவாது. நம் பண்டைத் தமிழ்ப்புலவர்கள் இவ்வுண்மையை நன்குணர்ந்தவர்கள். இயற்கையின் எழிலையும் ஆற்றலையும் ஏனைய பண்புகளையும் கூர்ந்து நோக்கித் தேர்ந்துரைத்தனவே 'இலக்கியங்கள்' எனப்பெற்றன. இன்று அறிவியல் வல்லுநர்கள் 'இயற்கையின் ஆற்றலைத் தேர்ந்துணர்ந்து மக்களின் வாழ்வு இன்பம் எய்தற்குரிய பலபல வழிவகைகளைக் கண்டனர். அவைகளே இன்று நாம் பெற்றிருக்கும் விஞ்ஞான சாதனங்களாகும். ஆனால் பண்டு புலமைமிக்கவர்கள் இயற்கையின் எழில் நலங்களை இனிது தேர்ந்து மக்களின் அகவாழ்வு இன்பம் எய்துதற்குரிய பலபல வழிகளில் ஓதிப்போந்தனர். அவையே நாம் இன்று பெற்றிருக்கும் தேனினுமினிய செந்தமிழ் இலக்கியங்களாகும்.

---

* 1-5-56ல் திருச்சி வானொலியிற் பேசியது.

விஞ்ஞானம் புறவாழ்வைச் செம்மைப்படுத்தும்; உடல் வாழ்வதற்கு வேண்டிய இன்பத்தை அளிக்கும். இலக்கியம் அகவாழ்வைச் செம்மைப் படுத்தும்; உள்ளம் வாழ்தற்கு வேண்டிய இன்பத்தை அளிக்கும்; "நவில்தோறும் நூல் நயம்" என்று வள்ளுவர் கூறுவது இவ்வின்பத்தையே யாகும். விஞ்ஞானம்-இலக்கியம் என்னும் இரண்டும் இயற்கை யென்னும் அடிப்படையின்மேல்எழுந்த இருபெரு மாளிகைகள் எனலாம்.

இயற்கையின் அழகாற்றல்களை நனித்தறியும் பண்பு மிக்க பண்டைப் பெரும்புலவர்ளில் கபிலர் தலைசிறந்தவராவர். தமிழ்நாட்டு அந்தணர்குடியிற் பிறந்தஇவர், தமிழ்ப்புலமை நிறைந்தவராய் விளங்கினார். பாரி என்னும் தமிழ்ப் பெருவள்ளலின் அவைக்களப் புலவராய் இலங்கினார். பாரியும் கபிலரும் சிறந்த நண்பர்களாய் வாழ்ந்தனர். கபிலர் பாரியைத் தம் உயிர் நண்பராகக் கொண்டமைக்குக் காரணம் ஒன்றுண்டு. இயற்கையில் தோய்ந்திடும் பாரியின் உள்ளப்பண்பே அக்காரணமாகும். ஓரறிவுடைய இயற்கைப்பொருள்களாகிய மரஞ்செடி கொடிகள் பாலும் பாரி வள்ளல் கொண்ட உள்ள உருக்கமே கபிலரை அவனுக்கு நண்பராக்கியது. பாரி மறைந்த பின்பும் அவனது இப்பண்பு கபிலர் மனத்தைவிட்டு அகலவில்லை. பற்றி நின்று வாழ்தற்குரிய கொழு கொம்பின்றி வழியிடை வாடிய கொடியைக் கண்டு உளமுருகித் தன் தேரையே அக்கொடி படர்தற்கு நிறுத்திய பாரியின் உயர் பண்பே கபிலர் அகக்கண்முன் என்றும் நின்று நிலவியது. விச்சிக் கோன்பால் சென்று பாரி மகளிரை மணந்துகொள்ள வேண்டிய பொழுது, அவனுக்கு அம் மகளிரை அறிமுகப்படுத்துகையில் பாரியின் இப் பண்பினையே கூறக் காண்கிறோம்.

> "இவரே பூத்தலை யறுஅப் புனைகொடி முல்லை
> நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
> கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
> பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்"

என்னும் கபிலர் திருவாக்கு கற்பவர் உள்ளத்தை உருக்குவதாகும்.

பாரியின் பறம்பு, முல்லையும் குறிஞ்சியும் கலந்தியல் பழியாது திகழும் பெருமலையாகும். இம் மலையிலுள்ள இயற்கை எழில் அளைத்

வதையும் பருகியவர் கபிலர். அவரறியாத விலங்கில்லை, மரமில்லை, பூவில்லை. குறிஞ்சிப் பாட்டில் அவர் கூறும் பூவகைகள் மாநூல் வல்லாரும் வியப்புறும் தன்மையின. செங்காந்தட் பூ முதல் மலைபெருக்குப் பூ முடியத் தொண்ணூற்றுறென்பது பூக்களைக் கபிலர் ஒரு சேரக் கூறியுள்ளார். அப் பூக்களின் இயல்புகளைக் கபிலர் நன்கறிந்தவர் என்பது அப் பூக்களுக்கு அவர் தரும் அடைமொழிகளே அறிவிக்கும்.

> "வள்ளிதழ் ஒண் செங்காந்தள்
> ஆம்பல் அனிச்சம் தண்கயக் குவளை"

என்பன அவற்றுள் சிலவாகும். சில மலர்களின் வடிவங்களைத் தக்க உவமைகளால் விளக்குகின்றார் கபிலர். முல்லையரும்பு வெருகுப் பூனைக்குட்டியின் முள்ளெயிறுபோல் இருக்கும். மூங்கில் முளை புள்ளிமான் கன்றின் செவிபோல் விளங்கும். தெறுழம்பூ யானை முகத்தில் உள்ள புள்ளிகள் போல மலரும். கபிலர் தம் மாநூலறிவும், விலங்கு நூலறிவும் இவ் வுவமைகளால் புலப்படும்.

புலவர்கள் இயற்கையில் காணும் காட்சிகள் பலப்பலவாகும். கேட்கும் இன்னியம் பலவாகும். பணச் செலவின்றியே பலப்பல நடனக் கலைகளை இயற்கைக் காட்சியில் கண்டு பண்டைப் புலவர் இன்புற்றனர். இயற்கையில் பாட்டுண்டு; கூத்துண்டு, முழவுண்டு. குழலுண்டு எல்லாம் உண்டு. இனி, கபிலர் கண்ட நாடகக் காட்சியொன்றை ஈண்டுக் காண்போம்.

பாரி பறம்பு மலையில் மூங்கில் புதர்களும் உண்டு. வண்டுகள் மூங்கிலைப் பல இடங்களில் துளைத்துவிட்டன. மேல்காற்று வீசுகின்றது. அக்காற்று மூங்கிலில் உள்ள துளைகளின் வழியே செல்

கின்றது. இனிய இசை எழுகின்றது. கபிலர் காணும் நாடக அரங்கில் எழும் முதல் இசை இக்குழலிசையே. பறம்பு மலையில் அருவிகள் பல. அவை கற்களை உருட்டிக்கொண்டு 'டம், டம்' என்னும் பெரு முழக்கத்துடன் ஒழுகும். இதுவே அங்கெழும் முழவோசை. மான் கூட்டங்களின் ஒலி வங்கியம் என்னும் கருவியின் ஓசைபோல் இசைக்கின்றது. மலைப்பூஞ் சாரலில் வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன. இது யாழ் ஒலியாக அமைகின்றது. அங்குப் பயில்கின்ற மயிலொன்று இயலி ஆடுகின்றது. கூத்தாடும் மகளென அது திகழ்கின்றது. மந்திகளாகிய அவையோர் மருண்டு நோக்குகின்றனர். வேய்ங்குழல், நீர்முழவு, வண்டுயாழ், மான்தூம்பு, இவ்வின்னிசைக் கருவிகள் இசைக்க, மயில்மகள், மந்திமாந்தர்காண, நடனம் செய்கிறாள். இயற்கை நாடக அரங்கின் எழில் இதுவல்லவா! காற்றில்லாத புழுக்கறையில் இருந்து காணும் செயற்கை நாடகத்தால் விளையும் துன்பத்தையும், இவ்வியற்கை நாடகத்தால் விளையும் இன்பத்தையும் எண்ணிப்பாருங்கள். இந்நாடகத்தைக் கவியோவியமாகக் கபிலர் தீட்டுகின்றார்.

> "ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்
> கோடை அவ்வளி குழலிசை யாகப்
> பாடின் அருவிப் பணிநீர் இன்னிசைத்
> தோடமை முழவின் துவைத குரலாகக்
> கணக்கலை இருக்கும் கடுங்குரல் தூம்பொடு
> மலைப்பூஞ் சாரல் வண்டு யாழாக
> இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
> மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
> கழைவளர் அடுக்கத் தியலியாடும் மயில்
> நனவுப்புகு விறலியில் தோன்றும் நாடன்"

இயற்கையில் நிகழும் காட்சிகள் மனத்திற்கு இன்பம் தருவதோடன்றி மக்களைச் செம்மைப் படுத்துவதற்கும் உறுதுணையாய் நிற்கின்றன.

தலைவன் ஒருவன் தலைவி ஒருத்தியை எதிர்பாராவகையில் சந்தித்தான். இருவரும் ஒருவரையொருவர் காதல் கொண்டனர்.

தலைவன் அவள்பால் களவொழுக்கம் நிகழ்த்தி வருகின்றான். எதிர்வொழுக்கத்திலேயே மயங்கி ஒழுகுகின்றான். தோழிக்கு இது பிடிக்கவில்லை. அவனை நல்வழிப்படுத்த நினைக்கின்றாள். தலைவியைத் தலைவன் விரைவில் மணந்துகொண்டு பழியற்ற கற்பு வாழ்க்கை மேற்கொண்டு வாழவேண்டும் என்பது அவள் கருத்து. ஒரு நாள் தலைவனைத் தோழி பார்க்கின்றாள்: 'உங்கள் மலையில் ஒரு நல்ல காட்சி காண்கிறேன்'', என்று அவன்பால் கூறுகின்றாள். ''உன் மலை மீது வாழைமரங்களும், பலாமரங்களும் மிகுதியாகப் பழுத்து விளங்குகின்றன. அப்பழங்களில் முதிர்ந்த தேன் ஒழுகி மலைச்சுனையில் கலக்கின்றது. குரங்கு ஒன்று அங்கு வருகின்றது; தேன் என்பதை அறியாமல் அச்சுனை நீரைப் பருகுகின்றது; பருகி மயங்குகின்றது. அருகில் உள்ள சந்தனமரத்தில் ஏறி இனிது தங்க அதனால் முடியவில்லை. அங்கேயே தரையில் விழுந்து பூக்களாகிய இனிய படுக்கையின்மேல் உறங்குகின்றது. எதிர்பாராத இன்பத்தில் மயங்கி மரமேறி இனிது தங்கவும் முடியாமல் கிடக்கின்றது அக்குரங்கு. இப்படியே உன் மலையில் பல விலங்குகள் எதிர்பாராத இன்பத்தில் மயங்கிக் கடமையை மறந்து கிடக்கின்றனவே''-என்கின்றாள் தோழி. ''நீயாவது எதிர்பார்க்கும் இன்பத்தை விரைவில் எய்தவேண்டும்'' என்கிறாள். தலைவன் தன் தவற்றை உணர்கிறான்; எதிர்பாராது கிடைத்த தலைவியின் களவின்பத்தில் மயங்கி, மணந்துகொள்ளும் கடமையை ஆற்றாது நிற்கின்ற தன் நிலை, விலங்குகளின் நிலைபோன்றல்லவா உள்ளது என்பதை உணர்கின்றான்; விரைவில் தலைவியை மணந்துகொள்ளுதற்குரிய ஏற்பாடுகளைச்செய்யத் தொடங்குகிறான். இயற்கைக் காட்சியைக் காட்டித் தலைவனைத் தோழி திருத்தும் இயல்பு பாராட்டத்தக்கது.

இவ் வோவியத்தைக் காவியமாகத் தருகிறார் கபிலர்;

''கோதில வாழைக் கோண்மிகு பெருங்குலை
ஊழ்உறு தீங்கனி உண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொ டூழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்
அறியா துண்ட கடுவன் அயலது

கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்
குறியா இன்பம் எளிதின் நின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்தும் நாட
குறித்த இன்பம் நினக்கெவன் அரிய."—அகம் 2.

குறுந்தொகை என்னும் நூலில் கபிலர் காட்டும் இயற்கைக்காட்சி ஒன்றைக் காண்போம். தலைவன் தலைவியை மணந்து கொள்ளாமல் காதல்வாழ்வு நடத்துகின்றான். இங்கும் தோழி தலைவனுக்கு வரைந்து கொள்ளும் உணர்வு தோன்றும் வகையில் அவனுக்குச் சில கூற எண்ணுகின்றாள். "வேரில் பழுக்கும் பலாமரங்கள் நிறைந்த மலை நாட்டுத் தலைவனே! எங்கள் ஊரில் பார்: சிறிய கொம்பில் பெரிய பலாப்பழம் தொங்குகிறது. இதுபோலவே தலைவியின் உயிர் மிகச் சிறியது. அவள் நின்பால் கொண்ட காமமோ மிகப்பெரியது. இதனை அறிந்து நட" என்கிறாள்.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை யாகுமதி:
யாரஃ தறிந்திசி னோரே? சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே."

என்பது தோழி கூறுவது. தோழி கூறும் உவமையைப் பாருங்கள்: கொம்பு மிகச் சிறியது. அதில் தொங்கும் பழம் மிகப் பெரியது. இது போலவே தலைவியின் உயிரோ மிகச் சிறியது; அவள் கொண்ட காமமோ மிகப்பெரியது. பழம் மேலும்மேலும் முதிருமானால் கொம்பு அதனைத் தாங்க இயலாது முறியும்; அல்லது பழம் உதிர்வதன்முன் பிறர் கொள்ளுதலும் கூடும். இதுபோலவே தலைவியின் காமம் மேலும் மிகுமாயின், அவள் உயிர் நீங்குதலும் கூடும்; அதனால் அதனைப் பிறர் மணம் முடித்தலும் கூடும். ஆதலின் இதனையறிந்து இவளை விரைவில் மணத்தற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்வாயாக. சிறிய கொம்பில் பெரிய பழம் தொங்கும் நிலையை நீ காணவில்லை போலும்.

கண்டிருப்பாயானால், தலைவியின் நிலையை நீ உணர்ந்திருத்தல் கூடும்! உனது ஊரில் கொம்பில் பழுக்கும் பலா இல்லையோ? வேரில் பழுக்கும் பலாமரங்கள் தான் உள்ளன போலும்!" என்று அவனுக்கு அறிவிப்பாள் போல, "வேரல் வேலி வேர்க்கோட் பலவின் சாரல் நாட" என்று அவனை விளிக்கின்றாள். இருவகைப் பலாமரங்களின் இயற்கைக் காட்சிகளைக் காட்டித் தோழி தலைவனுக்குச் சிறந்த அறம் புகட்டும் நயவுரை அறிந்து இன்புறுதற் குரியதல்லவா? இயற்கைக் காட்சிகள் மாநிலத்தோர்க்குக் கற்பிக்கும் பாடங்கள் பலப்பல. இவை யாவும் கபிலர் தம் காவிய ஓவியங்களாகும்.

இனி, கபிலர் குறிஞ்சிக் கலியில் தீட்டும் இயற்கைக் காட்சி ஒன்றினைக் காண்போம். எதிர் எதிரே இரண்டு பெரிய மலைகள் ஓங்கி நிற்கின்றன. இருமலைகளின் உச்சியிலிருக்கும் அருவி ஒழுகுகின்றது இடையே ஒரு வேங்கை மரம் நிற்கின்றது. அவ் வேங்கைமரத்தின் மேல் இரு அருவிகளும் வீழ்கின்றன. வேங்கை தழைத்துப் பூத்துத் திகழ்கின்றது. காலை வெயிலில் இக் காட்சி பொலிவுறுகின்றது. இரு பெருமலைகளும் இரண்டு யானைகளைப் போல விளங்குகின்றன. அவற்றினின்றும் விழும் அருவி அவ்விரு யானைகள் தம் தும்பிக்கையால் சொரியும் நீர்போல் தோற்றம் அளிக்கிறது. இடையில் பொன்னிறத்துடன் பூத்து விளங்கும் வேங்கை திருமகளெனக் காட்சிதருகின்றது. அவ் வேங்கை நிற்கும் பாறை தாமரைப்பூவெனத் திகழ்கின்றது.

இங்ஙனம் இருமலைகளின் இடையில் வேங்கைமரம் நிற்க, அதன் மேல் மலையருவி பாயும் தோற்றம், திருமகள்மேல் யானைகள் தூநீர் சொரியும் காட்சியினைத் தருவதாகக் கபிலர் கூறுதல் பாராட்டுதற் குரியது.

இயற்கைக் காட்சியினைத் திருமகள் தோற்றமாகச் சித்தரிப்பதுடன் புலவர் நிற்கவில்லை. இக்காட்சி வாழ்க்கைக்குரிய ஒரு நிகழ்ச்சியினையும் குறிப்பாகப் புலப்படுத்துகின்றது. இது ஒருதலைவனது மலை

நாட்டில் நிகழ்ந்ததாகும். இத்தகைய மலைநாட்டையுடைய தலைவன் ஒரு தலைவியின்பால் களவொழுக்கம் நிகழ்த்தி வருகின்றான். அவளை மணந்துகொள்ளாமலே தலைவன் இவ்வாறு நடப்பது தோழிக்குப் பிடிக்கவில்லை. தோழி தலைவனை விளித்து, தனது வேண்டுகோளை அறிவிக்க விரும்புகிறாள். அவள் தலைவனை அவனது மலைநாட்டுக் காட்சியின்மூலம் விளிக்கின்றாள். எதிர் எதிராக ஓங்கிய இரண்டு மலைகளும் தலைவன் தலைவி ஆகிய இருவர்தம் சுற்றத்தையும் குறிப்பால் புலப்படுத்துகின்றது. இடையில் உள்ள பாறை தலைவன் மனையாகும். இரண்டருவியும் வீழ்வது, இரண்டு சுற்றத்தாரும் செய்யும் சிறப்பாகும். வேங்கை பூத்து நிற்பது, தலைவி அழகிய மகவைப் பயந்து பொலிவுடன் நிற்பதாகும். இங்ஙனம் தலைவன் மனையில் தலைவி இல்லறம் புரிந்து, மகப்பெற்று, இருசுற்றத்தாரும் சிறப்புச் செய்யுமாறு புகழுடன் வாழும் வாழ்க்கை எவ்வளவு நன்றாயிருக்கின்றது! அவ்வாறு வாழும் வாழ்க்கைக்கு முயலாது, இவ்வாறு களவொழுக்கத்திலேயே நடத்தல் அழகன்று என்பதைத் தோழி தலைவனுக்குக் குறிப்பாக அறிவுறுக்கிறாள். இத்தகைய குறிப்புகளைப் பண்டைப் பெருமக்கள் உள்ளுறை யென்பர். நாகரிகமாக உள்ளக் கருத்துக்களை வெளிப்படுத்தும் பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை நலத்தைக் கபிலர் இங்ஙனம் பல பாடல்களால் இயற்கைக்காட்சிகளின் மூலம் புலப்படுத்தக் காண்கின்றோம்.

இயற்கைக் காட்சிகள் ஐம்புலன்களுக்கும் இன்பம் பயப்பதோடு மட்டும் நிற்கவில்லை. மக்கள் வாழ்விற் குரிய அறிவுரைகளையும், அறவுரைகளையும் குறிப்பால் புலப்படுத்தி நிற்பதையும் உணர்கின்றோம். நுண்மாண் நுழை புலமிக்க கபிலர் இயற்கைப் பொருள்களை நன்கு ஆராய்ந்து, அவைதரும் புறக்காட்சியினையும் அகக் காட்சியினையும் பலபல வாழ்க்கைக் குறிப்புக்களுடன் புலப்படுத்தியிருத்தல் பாராட்டத்தக்க தொன்றும்.

# தமிழர் பொருளாதார வரலாறு *

திரு. டாக்டர். பா. நடராசன் அவர்கள், M, A., D. Lit,

## 1. தொல்காப்பியப் பழங்காலம்

ஆதிமனிதன் மலைக்குகைகளில் விலங்குகள் போன்று வாழ்ந்து வந்தான். பின்னே காடுகளில விலங்குகளை வேட்டையாடி, கடலிலே மீன்பிடித்து வாழ்ந்தான். அதன்பின்னே மாடுமேய்ப்பதைத் தொழிலாக மேறகொண்டு, சுற்றி அலைந்தான். பின்னும் காலஞ் செல்ல, நீர்நிலைகளை அணுகி நிலையாக உழவுத் தொழிலை மேற்கொண்டான். பின்னே பண்டமாற்றலும், வாணிபமும் பலவேறு தொழில்களும் தோன்றின.

இந்த வரலாற்று அடிப்படையிலேயே தொல்காப்பியர் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நிலப்பகுப்பையும் அந்தந்த நிலத்துக்குரிய ஒழுக்கமுறைகளையும் வகுத்துக்கொண்டார்.

தொல்காப்பியர்காலம் இற்றைக்கு 2500 அல்லது 3000 ஆண்டுகட்கு முற்பட்டது என்று சொல்லப்பெறுகின்றது. தமிழில் இன்றுள்ள நூற்களில் இதுவே மிகத்தொன்மையான நூலாகக் கருதப்படுகின்றது. தொல்காப்பியர் காலத்தில் தமிழன் வாணிபப் பொருளாதார நிலையை அடைந்துவிட்டான். காலிலும் கலத்திலும் கடுகி, பண்டமாற்றும் தொழிலை மேற்கொண்டுவிட்டான். தொழில் துறையில் ஓரளவுக்குப் பாகுபாடும் தோன்றிவிட்டது பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர் என்று தொழிற் பாகுபாடு பற்றி, அடிப்படைச் சாதிப் பாகுபாடும் அமைந்துவிட்டது. 'மாடு' என்ற சொல் செல்வம் என்பதைக் குறித்த அளவில், தமிழனது முல்லைநில நாகரிகத்தைக் குறித்து நின்றதேயாயினும், தொல்காப்பியத் தமிழன் மெய்ப்பு நிலைப் பொருளாதார வாழ்வைக் கடந்துவிட்டான். எனினும் வாழ்க்கைப் பொருளாதாரம் பெரும்பாலும் இயற்கையோடு இயைந்து எளியதான ஆற்றிலேயே ஒழுகிறது. குடி அல்லது டிரைபு (Tribe) என்ற உணர்ச்சியே வலுத்திருக்க, நாடு அல்லது நேஷன் (Nation) என்ற உணர்ச்சி தலையெடுத்ததாகத் தெரியவில்லை.

---

* மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன் விழாவில் 4—6—1956 ல் நிகழ்த்திய சொற்பொழிவு.

## 2. சங்கப் பொற்காலம்

பின்னேவந்த ஐந்நூறு ஆண்டுகளைச் சங்ககாலம் எனலாம். இந்தக் காலத்தில் தமிழன் பொருளாதார வாழ்வு சிக்கல்பெறத் தொடங்கியது. இதற்கு முதன்மையான காரணம் அயல்நாட்டோடு எழுந்த வாணிபம் விரிவடைந்தமையே எனலாம். இந்த அயல்நாட்டு வாணிபத்தைத் தொடர்ந்து உள்நாட்டு வாணிபமும் வளர்வதாயிற்று. கலத்தின் பின்னே கால்சென்றது எனலாம். அயல்நாட்டு வாணிபம் ஆதியில் மேற்குக் கடற்கரையோரமாகவே எழுந்தது. இதனால் யவனர் என்று சொல்லப்படும் கிரேக்க உரோமானிய மக்கள் உறவு தமிழுக்கு உண்டாகியது. அயல்நாட்டினர் தொழில்நுட்பம் தமிழ்நாட்டில் இடம் பெற்றது. சிறப்பாகக் கட்டிடத் தொழிலிலும் போர்த் தொழிலிலும். பொறிகளை அமைக்கும் இயந்திர நுணுக்கம் தமிழகத்தில் சேர்ந்தது. வாணிபம் விரியவே நகரநாகரிகம் தோன்றுவதாயிற்று. தொல்காப்பியர் காலத்து, உழவும் மேய்ப்பும் வேட்டையாடுதலும் சிறந்த பொருளாதார முறைகளாயிருந்தன. சங்க காலத்தில் காடுகள் தெளிந்து நாடாகி உழவில் சற்றும் குறைந்துபடாது முன்னினும் சிறந்ததேயாயினும் உடனேயே வாணிபமும் கைத்தொழிலும் சிறந்து நின்றன. சிறப்பாக ஆடைத்தொழில் செழிக்கலாயிற்று. தொழிற்பாகுபாடு அல்லது சிறப்பிடச்சிறத்தல் (Specialisation) முன்னினும் மிகுதியாயிற்று. இதனால் தொழில் பற்றிய சாதிப் பாகுபாடும் பல்கியது. நாற்குடித் தமிழ்மக்கள் பதினெண் குடியும் மேலுமாய்ப் பிரிந்தனர். வடநாட்டோடு வாணிப வாயிலாகவும், படையெடுப்பு வாயிலாகவும் தொடர்பு நெருக்கமுற்றது. குடி அல்லது மரபு (Tribe) என்ற உணர்ச்சி குறைந்து, நாடு அல்லது தேசம் (Nation) என்ற உணர்ச்சி தலையெடுத்தது. இந்த நாடு என்ற உணர்ச்சி சேர சோழ பாண்டியர் என்று மூவகையாய்ப் பிரிந்தேனும், மிகுந்த நெருக்கடியான கட்டங்களில ஓரளவு தற்காலிக ஒற்றுமை பெற்றுத் 'தமிழன்' என்ற அளவுக்குத் தாவியும் விட்டதென்று சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. ஆயினும் இது நிலைபேறான ஓருணர்ச்சியாய் நில்லாது பெரும்பாலும் கிரேக்கர்களுடைய சிட்டி ஸ்டேட் (City State) அல்லது சிறு தனிநாடு என்ற அரசியல் பொருளாதாரக் கொள்கையே சங்க காலத்து அடிப்படையாய் இருந்தது எனலாம். வள்ளுவர் 'நாடு' என்பதற்குக் கூறும் இலக்கணங்களிலெல்லாம் இத்தகையதொரு சிட்டி ஸ்டேட் அல்லது சிறு தனிநாட்டுக்குரிய இலக்கணங்களாகவே இருக்கின்றன.

சங்ககாலத்தில் உழவும் வாணிபமும் தொழிலும் சிறந்தனவே யாயினும், வறுமையும் பொருளாதார வேற்றுமையும் பஞ்சமும் கடும் வரிவசூலிப்பும் இல்லாமலில்லை. உழுவோரும் உழுவித்துண்போரும் இருந்தனர். ஆனால் இவற்றை விதிக்கு விலக்காகக் கொள்ள வேண்டுமே யன்றிப் பொதுநோக்காகப் பார்க்குமிடத்து, மக்கள் பெரும்பாலோரின் பொருளாதார நிலை தலைசிறந்திருந்ததெனவே சொல்லவேண்டும். வெறும் வயிற்றில் கற்பனை பிறப்பதில்லை. பட்டினிப்பாறையில் அமர இலக்கியம் வளர்வதில்லை. பொருளாதாரச் செழிப்பிலேயே ஒப்புவமை இல்லாச் சங்க இலக்கியங்கள் பூத்தன.

வேலையில்லாத் திண்டாட்டம் என்பது சங்ககாலத் தமிழரைப் பீடித்த ஒருநோயாயிருக்கவில்லை. எல்லோரும் யாதானுமொருதொழிலில் அடிப்படைத்திறன் பெற்றவராய் இருத்தல் வேண்டுமென்பது சமூகப் பொருளாதாரக் கொள்கையாயிருந்தது போல் தோன்றுகின்றது. "எத்தொழிலாயினும் இழிவுடையதன்று; எத்தொழிலும் இல்லாமையே இழிவுடைத்து" என்பது அன்றைய பூட்கை (மேற்கோள்) போலும். ஆனால் அந்தந்தத் தொழிலிலேயே உடல வாழ்க்கைக்கு வேண்டும் இன்றியமையா ஓய்வுப் பொழுதும் இருந்தன. அதனுடன் எக்குடிப் பிறந்தார்க்கும் எக்கல்வியும் கற்கும் உரிமையும் இருந்தது. இந்தச் சமூக அமைதியிலே நெசவு செய்துகொண்டே வள்ளுவர் திருக்குறளை எழுதவும், அரசியல் வியவகாரங்களில் ஈடுபட்டுக்கொண்டே இளங்கோ சிலப்பதிகாரம் பாடவும், கூலவாணிகம் செய்துகொண்டே சாத்தனார் மணிமேகலை யெழுதவும், மருத்துவம் செய்துகொண்டே தாமோதரனார் புலமை மிகவும், உழவுத்தொழிலில் ஈடுபட்ட அளவிலேயே ஆலூர்கிழார் அரியபாக்கள் யாக்கவும், காலற்றவராய் இரும்பை அடித்துக் கொண்டே தண்கால் முடக்கொல்லனாரும், இசையணுகப் பயின்றுகொண்டே கேசவனாரும், கணிதநூல் ஆராய்ச்சிசெய்துகொண்டே கணிமேதாவியரும், தமிழிலக்கியத்தை வளம்பெறச்செய்ய முடிந்தது. புலவர்களின் இந்தப்பொருளாதாரச்சுதந்திரத்தால் தமிழிலக்கியமும் தங்குதடையின்றி எவராணைக்கும் அடங்காது யாப்பினும் பொருளினும் புதுப்புது பாணிகளில் பல்வேறு வகையில் கிளைத்துச் செழித்தன. சிந்தனைச் சிற்பிகளுக்குத் தடையுத்தரவு இல்லாத காலமாகச் சங்ககாலப் பொருளாதார அடிப்படை வாழ்வு அமைந்திருந்தது. இதனாலேயே நெற்றிக்கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என்று சொல்லும் சுதந்திரமனப்பான்மையும் தமிழன் இலக்கிய இலட்சியமாயிற்று.

வரலாற்றுக் கண்ணோடு பார்க்கையில் சங்ககால மெனக் கருதப்படும் ஐந்நூறு ஆண்டுக்காலம் அதன் முன்னே சென்ற தொல்காப்பியக் காலத்திலும், விரைந்த, மிகவிரைந்த பொருளாதார முன்னேற்றத்தை அடைந்தகாலம் என்றே தோன்றுகின்றது. சமூகம், தேக்கம் கழிந்து அதிவேகமாக முன்னோக்கிச் சென்றுகொண்டிருந்த காலம். இந்தப் பெரும்வேகத்திற்கு மேலநாடுகளோடு ஏற்பட்ட வாணிகமும் அதனடியாய்வந்த தொழில் விரிவுமே அடிப்படையென்று மேலே காட்டினோம். யவனர் போன்ற அயல்நாட்டு மக்களின் உறவே தொழில் நுணுக்கமும் பொறிநுட்பமும் விரிவதற்குக் காரணமாக இருந்தன வென்றும் காட்டினோம். மேலைக்கடற்கரையில் தொடங்கின வாணிகமுயற்சி நாளடைவில் கீழ்க்கடற்கரைக்கும் விரிந்து, இலங்கை கலிங்கம வங்கம் போன்ற தேயங்களோடும் நெருங்கியது. உள்நாட்டு வாணிபமும் வடநாட்டோடு தொடர்பு கொண்டது. ஏற்றுமதி வாணிபம் பெருகியது. பொன்னும், மதுவும், பிற அரிய பொருள்களும் இறக்குமதியாயின. பொன்மிக, உரோம நாணயங்கள் புகுத, செலாவணி பெருகி, நாட்டின் தேசியவருமானம் உயர்ந்தது. தமிழர் பொருளாதார வாழ்வு உரோமப் பேரரசின பொருளாதார வீழ்ச்சியாய் முடிந்தது. தொழில்கள் சிறந்தன. வளப்பம் பொங்கியது.

ஆயினும் இத்தனையும் தமிழர் அன்று வாழ்வுபற்றிக் கொண்டிருந்த கோட்பாட்டையே பொறுத்து இருந்தது. ஒரு நாட்டு மக்கள் வாழ்வுபற்றி அவர்கள் என்ன மனநிலை கொண்டிருக்கின்றார்களோ அம்மட்டே அவர்கள் பொருளாதார வாழ்வு. சங்ககாலத் தமிழர் இவ்வுலக வாழ்வைக் கரும்பென விரும்பினர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதையே இலட்சியமாகக் கொண்டனர். உண்டு உடுத்து, குடித்து, ஆடி, பாடி, களித்து வாழ்ந்தனர். இதனால் அவர்கள் உலகாயதர்களென்றோ, சம்சயவாதிகளென்றோ, நாத்திகர்களென்றோ கூற இயலாது. இவ்வுலக இன்பவாழ்வு மேலுலகவாழ்வுக்கு இடையூறு என்று கருதியவர்களல்லர்; இரண்டுக்கும் முரண்பாடு வேண்டுவதின்று என்பதே அவர் தம் கருத்து. 'அருளில்லார்க்கு அவ் வுலகம் இல்லை யாங்குப் பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' 'வாழ்தல்வேண்டும் இவண் வரைந்த வைகல்' என்ற ஈருலக இன்பத்தழுவலே, அவர்கள் கோட்பாடு. எனவே வாழ்வில் ஒழுக்கத்தை உயிரினும் மிகுதியாக உயர்த்தி ஓம்பினர். அன்பை, கொடையை, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்

வாழும் நெறியைப் பொன்னேபோல் போற்றினர். சமயமென்பது கண்மூடி மௌனியாக, வனசஞ்சாரகு வாயில்வா, வன்பசிதவிர்த்து வாழ்வது என்பதை ஏற்கவில்லை. வேலனுக்கு வெறியாட்டயர்ந்து, கண்ணனுக்கும், காமனுக்கும், விழாவெடுத்துக் களித்து வாழ்வதைத்தூய சமய நெறிக்குப் புறம்பானதென்று அவர்கள் கருதினரிலர். ஆடாத பாடாத தமிழ்த்தெய்வமெதுவுமே யிருந்ததில்லை. எனவேதான் திருவள்ளுவரும் அறம் பொருள் இன்பம் என்ற முப்பொருளைப்பற்றியே முழுதும் விரித்துரைத்தார்.

## 3 களப்பிரர் பௌத்த சமண காலம்

ஆனால் பௌத்த சமண மதங்கள் சங்ககாலத்தின் கடை யெல்லையில் தமிழ்நாட்டில் புகுந்து பரவவே, தமிழனின் மனநிலையில், வாழ்வின் குறிக்கோளில், புரட்சிகரமான ஒருமாறுதல் நிகழ்ந்தது. உலக வாழ்வை வெறுக்கத் தொடங்கினன். வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம் என்பதைத் தமிழன்காதில் முதல் முதல் போட்டவை இந்தச் சமயங்களே. அவாவறுத்தல், துறவு, ஊழ் என்ற கொள்கைகளுக்கு முன்னில்லாத தலைமையும் வலிமையும் வந்தெய்தி, பொருளாதார வாழ்வைப் பிணித்தன. சமூகமேம்பாட்டுக்கு ஒருசில ஒப்பற்ற தலைவரைப் படைப்பதற்குத் துறவு ஒரு கருவி என்றில்லாது மனைவி மக்களோடு உண்டுடுத்து வாழ்வதற்கு மறுப்புச்செய்யும் ஒருகோட்பாடாக மாறியது. வாழ்க்கையில் விலக்கமுடியாது வரும் மேடு பள்ளங்களை அவ்வப்பொழுது நிரப்பிக்கொள்ளப் பேதைமனத்திற்கு உற்றுழி உதவவல்ல ஒரு ஆறுதல் தரும் கோட்பாடு என்பதுபோய், உறுதிப்பாட்டையும், உழைப்பையும், குலைக்கவந்த ஆற்றலழிக்கும் நச்சு வேதாந்தமாகியது ஊழ். இசை, நடனம் போன்றவை எள்ளத் தகுந்த கலைகளாயின. இயற்கையில் எழும் இன்ப உணர்ச்சிகளும், அவற்றுக்கு ஊக்கம் தரும் கவின்கலைகளும் வேம்பெனக் கருதப்பட்டன. எளியவாழ்வுக்குத் துணைசெய்யும் உரியதொரு கோட்பாடு என்பது கழிந்து பொருளாதார ஆக்கத்துக் கோர் அழிவுக்கருவியாய் முடிந்தது அவாவறுத்தல் என்னும் நெறி. இக்காலத்தில்தான் செல்வத்திற்கு வெறுக்கை என்ற பெயர் தமிழில் பிறந்தது போலும்.

இக் கொள்கைகள் புகுந்து பரவி நிலைத்தகாலம் ஏறக்குறைய நானூறு ஆண்டுகள் எனலாம். அஃதாவது கி. பி. இரண்டாம்

நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையாகும். பொருளாதார வகையால் நோக்குமிடத்து இக்காலம் தமிழனின் இருண்டகாலம் எனலாம். பொருளாதாரச் சக்கரம் பின்னோக்கிச் சுழன்ற காலம்; கலைகளும் தேங்கிக் கவித்த காலம்; களப்பிரர் போன்றவர் படையெடுக்க நாட்டில் பெருங்குழப்பம் ஏற்பட்ட காலம்; தனிநல உணர்ச்சியும் தனி மனித உரிமை வேட்கையும் தலையோங்கிச் சமூகக் கட்டுப்பாட்டைக் குலைத்த காலம்.

## 4 பல்லவர் சமய மறுமலர்ச்சிக் காலம்

இந்தச் சீர்கேடான நிலைமையிலிருந்து தமிழ்நாட்டை மீட்டுக் கலைக்கும் தொழிலுக்கும் புத்துயிர் அளித்து வையகவாழ்வில் மீண்டும் கருத்தினை நாட்டிய பெருமை, அரசியல்துறையில் பல்லவர்க்கும் கருத்துத்துறையில் சைவ வைணவ நாயன்மார்க்கும் உரித்தாகியது. புதிதாய் வந்த பல்லவ அரசு, தமிழருள்ளே, புது இரத்தத்தைப் புகுத்தியதோடு, கிராம சபைகளையும், ஊராண்மை மக்களாட்சி முறைகளையும் அமைத்து சமூகக் கட்டுப்பாட்டை நிலைநாட்டின. சமய மறுமலர்ச்சியோ ''பொன்னும் மணியும் போகமும் தா'' என்று சுந்தரர் போன்று இறைவனைக் கேட்பது இழுக்கன்று என்ற அளவில், வையக வாழ்வை அடிப்படையாகக் கொண்டது. "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற நம்பிக்கை யூட்டுவதே சமயநெறி யென்று திருஞான சம்பந்தர் போன்றோர் மக்களுக்கு எடுத்து விளக்கினர். அரசியலும் சமயமும் கைகோத்து, கோயிலை மையமாகக் கொண்டு ஊராண்மை மக்களாட்சி வட்டத்தில் மீண்டும் வேகமாய்ச் சுழல முற்பட்டது. தேய்ந்த தொழில்களும் தேங்கிய கலைகளும், வறண்டுவிட்ட வாணிபமும், வற்றலமரம் தளிர்த்ததுபோல் உயிர்பெறலாயின. மேற்குக் கடற்கரையோடு சிறப்பாய் நடந்த வாணிபம் கிழக்குக் கடற்கரையை நாடுவதாயிற்று; கம்போடியா வரையிலும் விரிந்தது. புது இலக்கியங்களும் கற்பனைகளும் தமிழர் சிந்தனையில் ஊற்றெடுக்க முற்பட்டன. பொருளாதார வாழ்வு மீண்டும் உயிர்ப்பெய்தியது.

## 5 சோழப் பேரரசின் உச்சிக்காலம்

பல்லவர் காலத்துத் தொடங்கிய மறுமலர்ச்சியின் முழுவிரிவும் பெருக்கமுமே சோழப்பேரரசின் பொருளாதாரமெனலாம். ஏரிகளையும் குளங்களையும் தொட்டு, அணைக்கட்டுகளைக் கட்டி, உழவை வாழவைத்தனர் சோழர். சுங்கவரிகளைத் தளர்த்தித் தாராள்வாணிகம் (Free Fare) அல்லது

வரியில்லா வாணிக முறையை நிறுவி வாணிகத்தை வளர்த்தார்கள். கீழ்நாடுகளெங்கும் சோழரது புலிக்கொடி நிழலில் தமிழர் திரைகடலோடி வாணிகம் நடத்தினர். கோயில்களும் தலைநகரங்களும் சாலைகளும் பல அமைத்து வேலையில்லாமையைப்போக்கினர். கோயில்களைத் துணையாகக் கொண்டு, மருத்துவ கலாசாலை, ஆதுலர் சாலை, ஆவுறை சாலை எனப் பற்பல சமூகநலப்பணிகளை அரசாங்கமே நேரடியில் மேற்கொண்டு பேணும் ஆட்சிக்கு வித்திட்டனர்; கலைகளை வளர்த்தனர்; கல்வி நிலையங்களைப் பெருக்கினர். நிலத்தை அளந்து திட்டமிட்டு நிலவுரிமையை வழங்கி உழவு செழிக்கச் செய்தனர். நிலையான நிலப்படையும், கடற்படையும் அமைத்து வேலையில்லாமையைப்போக்கிப் பொருளாதார வாழ்வை வளம்படுத்தினர். வேற்றுப் புலங்களை வென்று, பெரும்பொருள் கவர்ந்து நாட்டுப் பணிகளில் ஈட்டி, தமிழர் வாழ்வைத் தழைக்கச் செய்தனர். வேற்றுமக்களைக் குடியேற்றி அறிவும், உழவும், தொழிலும், ஆக்கம்பெறச் செய்தனர். தரிசு நிலங்களைச் சாகுபடி செய்வித்தனர். பெருநிலக்கிழவர் பலரிருந்தனரேனும், பெரும்பாலும் ஊராண்மை முறையில் உழவுநிலம் வழங்கி, சமூகஏற்றத்தாழ்வுகளைக் களைய முற்பட்டனர். தொழிற்பாகுபாடும், சாதிப் பாகுபாடும், முன்னினும் மிக விரிந்து தொழில் நுட்பமும் பொருளாதார முற்போக்கும் ஏற்பட்டன. புலமை தனித் தொழிலுமாகியது. பொருளாதார வளப்பத்திலே பெரியபுராணம் இராமாயணம் முதலிய பேரிலக்கியங்கள் தோன்றலாயின. சோழப்பேரரசின் இறுதிப்பகுதியில் சமயத் துறையின் உணர்ச்சிக்காலம் மெல்லக் கழிந்து, ஓய்வு மிகுந்த, சிந்தனைக்குரிய காலம் பிறந்தது எனலாம். தேவாரம் திருவாய்மொழி போன்ற தோத்திரங்களுக்கு அடிப்படைத் தத்துவங்களை ஆராய முற்பட்டனர் மெய்கண்டார், இராமானுசர் போன்ற பெருமக்கள். தமிழர் பொருளாதார வாழ்வில் கி. பி. 1000 முதல் 1300 வரையில் போந்த காலத்தை உச்சி நண்பகற் பொழுதென்று சொல்லலாகும்.

## 6 விசயநகரகாலம்

பின்னேவந்த பிற்காலப் பாண்டியர் ஆட்சியும், [illegible] பேரரசும் சோழர் அடிச்சுவடுபற்றி ஓரளவில் சோழர்காலத்து அமைந்த தமிழர் பெருமையைக் கொண்டு நடத்தியதெனச்சொல்லலாம். ஆயினும் வீழ்ச்சிக்குரிய அறிகுறிகள் இக்காலில் தொடங்கிவிட்டன. இதற்கு நிலவுரிமையை பியூடலிசம் (Feudalism) என்ற முறையில் ஆட்சியை நிறு

வினதுவேயாகும். பாளையக்காரர் என்னும் குறுநில மன்னர் நினைத்தபடி மக்கள்பால் வரிவசூலித்தனர். இதனால் விசயநகர ஆட்சியில் நாயக்கமன்னர்கள் குளங்கள் தொட்டனரேனும், கோபுரங்கள் எழுப்பினரேனும், பாமரமக்கள் வாழ்வு மிகுதியாகச் சிறக்கவில்லை. வெளிவாணிபமும் போர்ச்சுக்கீசியர் போன்ற அயல்நாட்டார் கையில் நழுவியது. பொருளாதாரவாழ்வு தேக்கங்கண்டது. இஃது இலக்கியத்திலும் நிழல்செய்தது. கற்பனை விரிவடையாது, அரைத்த மாவை அரைப்பது போலப் பல தலபுராணங்கள் தோன்றலாயின. படைக்கும் ஆற்றல் தமிழனிடம் குறைந்து பின்னேவந்த முகமதியராட்சியில் வீழ்ச்சிப் பாதையில் வேகமாய்ச் சென்றது. ஆள்வோருக்கும் ஆளப்பட்டவர்க்கும் இடையே இருத்தற்குரிய தொடர்பு குறைந்தமையே நவாபு ஆட்சியின் பலக் குறைவாயிற்று. எவர் மிகுதித் தொகை கொடுக்க வல்லவர்களோ அவர்களுக்குக் குத்தகையாய் நிலவரியை விடுவது என்ற முறை வந்ததும், உழவு வாட்டமுற்றது. வெளிநாட்டு வாணிபம் வெள்ளையர் கையில் முற்றும் சிக்கியது. ஏரி குளங்கள் செப்பனிடப்படாமையால் உழவு வருமானம் குறைவுபட்டது. மங்கிய பொருளாதாரச் சூழலிலே தமிழர் கலைவாழ்வும் மங்கியது.

## 7 வீழ்ச்சிக்காலம்

தமிழரது அயல்நாட்டு வாணிபம் சோழர்கால இறுதியில் அராபியர்க்குப் பறிபோயிற்று. பின்னே அராபியரிடமிருந்து மேலைநாட்டவரான டச்சு, போர்ச்சுக்கல், ஸ்பெயின், பிரஞ்சு, ஆங்கில தேசத்தினர் கையிலே மாறியது. இந்த மாற்றத்தால் வாணிபம் மட்டுமன்று, தமிழர் தொழில்களும் மெல்ல அழிவடையலாயின. ஆதியில் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஏராளமான ஆடைகளை இங்கிருந்து ஏற்றுமதி செய்ய வந்தனரேனும், அவர்கள் தேசத்திலே இயந்திர உற்பத்தி புரட்சிகரமாக எழவே தமிழ் நாட்டின் தலைசிறந்த தொழிலாயிருந்த ஆடைத்தொழில் அழிவு எய்துவதாயிற்று. இதனால் வேலையில்லா நிலைமை வந்தது. உழவுத்தொழிலில் முன்னினும் மக்கள் மிகுந்து மொய்த்தனர். பொருளாதாரச் சமநிலை போயிற்று. பல்லாயிரம் தமிழ்மக்கள் போதிய நிலமில்லாது இலங்கை, பர்மா, மலேயா முதலிய நாடுகளை ஆண்டுதோறும் நாடித் தங்கள் உழைப்பை விற்று வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டது. உண்மையில் பதினேழாம் நூற்றாண்டில் டச்சு போர்ச்சுக்கீசியரால் தமிழன் அடிமையாகவே

விற்கப்பட்டு விட்டான். ஆங்கிலேயர் காலம் வந்ததும் அடிமைப பட்டயத்தை யொத்த உடன்பாட்டுக்கு ஆளாகி வேற்று நாடுகளுக்கு அனுப்பப்பட்டான். இந்தத் தமிழடிமையின் உழைப்பே, முதலில் நெற்பயிர்த் தொழிலையும் பின்னர்த் தோட்டத் தொழிலையும் பர்மா, மலேயா சாவா, தென் ஆப்பிரிக்கா, இலங்கை போன்ற தேயங்களுள் புகுத்தி அவற்றை இன்று காணுமளவில் பொருளாதார வளமுள்ளவாய்ச் செய்தது.

தமிழர் உழைப்பு இங்ஙனமாக, தமிழர் மூலதன வரலாற்றை நோக்குவோம். சோழர் உச்சிப் பகற்காலத்திற்குப் பின்னர் "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற மூதுரைக்கு அடிப்படையாய் இருந்த துணிப தமிழனைக் கைவிட்டது. தமிழரின் வெளிநாட்டு வாணிபம் முதலில் அரபியர் கையிலும், பின்னர் டச்சு, போர்ச்சுக்கீசியர், பிரஞ்சு, ஆங்கிலேயர் எனும் மேலைநாட்டார் கையிலும் முற்றிலும் போய் விடவே தமிழ்வணிகரின் மூலதனம் துண்டு விழுந்ததால் மிகுந்த சாக்கிரதையோடு அவர்கள் வட்டித் தொழிலில் இறங்கினர்; தமிழ்த் தொழிலாளர் சென்றதிசை யெல்லாம் அவர் நிழற்காவலில் ஒதுங்கிப் பதுங்கிச் சென்று கடன்கொடுத்துக் கவலையின்றி வாழ்வதிலே கருத்தாயிருந்தது. மார்வாரிகள் குசராத்திகள் போன்ற வடநாட்டு வணிகமரபினர் மெத்த வளர்ந்துவரும் மேல்திசையை நோக்கி அயல் நாட்டு வாணிபத்தில் கல்கத்தாவிலும் பம்பாயிலும் முனைந்தபொழுது தமிழ்நாட்டுத் தொல்குடி வணிகமக்கள் இரங்கூன், சிலோன், பினாங்கு, சிங்கப்பூர் என்ற துறைமுகங்களை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். முன்னையோர் வெள்ளையர் வேகம்கண்டு புது இயந்திரத்தொழில்களை நூல்ஆலை, சணல்ஆலை, எஃகாலை என்று அடுக்கடுக்காய் நிறுவி இந்தியாவினுமோர் இயந்திரப் புரட்சியை மெல்லத்தொடங்கிக்கொண்டிருக்கையில், தமிழர் மூலதனம் கீழ்நாட்டு உழவில் புகுந்து கவலையில்லா வட்டித் தொழிலில் தேங்கிக்கிடந்தது. இதனால் துணிவற்ற தமிழர்முதல், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பலனற்ற வகையிலேயே நெடுங்காலம் இருந்துவந்தது. அடிமையில் ஆழ்ந்த தமிழன் புதுவாழ்வு வேண்டினான். பாரதியார் மறுமலர்ச்சி இயக்கத்துக்கு இலக்கிய உலகில் வித்திட்டு மறைந்தார். விடுதலைப்போரில் தமிழன் வறுமைக் கிடையே தன் செங்குருதி கொட்டித் தனிப்புகழ் நாட்டினான்,

## 9 விடுதலைக்காலம்

1947-ல் இந்தியா ஆங்கில ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை அடைந்து தமிழனுக்கு உள்நாட்டில் உரிமை பிறந்ததேனும் வெளி நாட்டில் பர்மா, இலங்கை, மலேயா முதலிய நாடுகளில் துன்பம் விளைக்கலாயிற்று. தமிழ்த் தொழிலாளர்கள் தாயகத்துக்கு வெருட்டப் பட்டனர். தமிழர் மூலதனம் பறிமுதல்செய்யப்பட்டதுபோன்ற நிலைவந்தடைந்தது. உள்நாட்டுத் தமிழன் வெளிநாட்டு உடன்பிறந்தானுக்கு உறுதி அளிக்கும் ஆற்றலில்லாது, வலியற்று விழிக்கின்றான். இந்த நிலையிலே மூன்றுகோடித் தமிழராகிய நாம் தனி மாகாணம் நிறுவி டில்லி மத்திய அரசின் குடைநிழற்கீழ் ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்து வாழ்க்கைநிலை உயர்த்தத் தொடங்கியிருக்கின்றோம். மூன்றுகோடித் தமிழருக்கு மூன்றுகோடி ஏக்கர் நிலப்பரப்புமுண்டு. அஃதாவது ஸ்பெயின்தேசத்து மக்கள் தொகையை ஸ்பெயின் தேசத்தின் நாலில் ஒரு நிலப்பரப்பில் கொண்டுள்ளோம். யூகோஸ்லேவியா அளவுபரப்பில் அதன் இருமடங்கு மக்கள் தொகை கொண்டவராய் இருக்கின்றோம். டென்மார்க்கினும் மும்மடங்கு நில விரிவுடையவராயிருக்கின்றோம். ஆனால் மக்கள் தொகையில் அறுமடங்கு மிக்கவராயிருக்கின்றோம். சனநெருக்கத்தில், பெரும்பாலான ஐரோப்பா நாடுகளைவென்று நிற்கின்றோம். ஆளொன்றுக்கு 0.62 ஏக்கருக்குமேல் உழவு நிலமில்லை. பம்பாய், ஒரிசா, உத்தரபிரதேசம் போன்ற மாகாணங்களினும் சென்னை மாகாணம் நிலையில் மிகவும் இழிந்துள்ளது. ஏறக்குறைய 40 லட்சம் ஏக்கர் நிலம் உழவுக்கு உரித்தாயிருந்தும் சாகுபடி செய்யப்படாமல், தரிசாய்க் கிடக்கின்றது. தலைக்கு நாளொன்றுக்கு ஒரு இராத்தல் உணவு என்ற கணக்கில் நம் விளைவைப் பத்துச் சதமாவது பெருக்கினால்தான் உணவில் தன்னிறைவு கொள்ளல் இயலும். மக்கள் தொகை வளரும் வேகத்தில் மேலும உணவு வேண்டப்படும். நூற்றுக்கு ஒருவர்கூட ஆலைத் தொழிலில் வேலை பெறவில்லை. இருநூற்றில் ஒருவர்க்குத்தான் ஆலை வேலை. எண்ணிக்கையில் பாங்கிகள் பல இருக்கின்றனவேயன்றி மூலதனத்தில் இந்திய மூலதனத்தில் இருபதில் ஒன்றுகூட இல்லை.

நாலாயிரம் மக்களுக்கு ஒரு பள்ளி என்ற அளவிலே கல்வி முன்னேற்றமுள்ளது. இந்தியாவின் சராசரி 2292 மக்களுக்கு ஒருபள்ளி. அந்த அளவுகூடத் தமிழனுக்குப் படிப்பில்லை. தமிழ் நாட்டிற்கு என்று தேசிய வருமானத் தமிழ்க்கணக்கு இல்லை. அகில இந்தியப் புள்ளியில் நாம் மறைகின்றோம். நம் உண்மை முன்னேற்றம் தெரிவதற்குரிய புள்ளி விளக்கில்லை. மேலைநாடுகளில் ஒருசிறு பின்ன அளவே நமது வருமானம் என்பது உறுதி.

## 9 வருங்காலம்

ஒருநாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வேண்டியவை நான்கு. அவையாவன: 1. மக்கள் முன்னேற்ற உள்ளம். 2. நிலமும் அதிலடங்கிய தாதுப்பொருள்களும். 3. உழைப்பு. 4. தொழில் நுட்பம் சிறந்த சான்றோர்கள். முதல் அல்லது மூலதனத்தை அவ்வளவு இன்றியமையாதது எனக் கொள்வதற்கில்லை. மேற்கூறிய நான்குமிருந்தால் மூலதனம் தானே எளிதில் வந்தெய்தும். 'உள்ளம் உடைமை உடைமை' என்று வள்ளுவர் கூறுவதை நோக்குங்கள். பொருளாதார வாழ்வில் உயரவேண்டுமென்ற ஆழ்ந்த அவாவே தலைசிறந்தது. "மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வன்றோ?" 'சோஷலிசம்' என்ற சுலோகம் மட்டும் நிம்மதியளிக்காது. இன்றைய முறையில் அரசாங்கமே எப்பணியும் செய்யவேண்டும் என்ற சோஷலிச சமுதாயம் வருவதானால், விரைவில் மக்கள் அரசுரிமை போய் அதிகாரிகள் ஆட்சிகொண்ட ஒருவகை பாசிசமே தலையெடுக்கும். பரவலான பொருளாதார அமைப்புவேண்டும். சப்பான், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளை நமக்குரிய முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். ஆனால் அவற்றிற்கு மனிதன் அடிமையாகி விடக்கூடாது. இதுவே காந்தியடிகள் காட்டிய நெறியாகும்.

# குப்பைக் கோழி

மா. ரா. இளங்கோவன், B. A. Hons.

தமிழ் அகப்பொருள் இலக்கியங்கள் படித்து இன்புறத்தக்க பாடல்களைக் கொண்டுள்ளன. அப்பாடல்கள் தமிழர் தம் வாழ்வியலை விளக்குவனவாய் அமைந்துள்ளன. எங்கு பார்த்தாலும் காதல்-போர் என்னும் இரண்டையே காணும் நிலையில் உள்ளன. சங்க காலத்து அகப்பொருள் பற்றிய நூல்களும், காதல்-அகவாழ்வுக்கு அடிப்படையானது, போர்-புறவாழ்வுக்குப் புகழ்தருவது; இரண்டும் இரு முனைகள், இருமுனைகளிலும் சிறந்து விளங்கினர். அவற்றைத் தமிழர் தோள்கள் தினவெடுக்கின்றன என்று கூறிச் சமர்செய்தலில் சலியாதிருந்தோர் இல்லறத்தில் இன்பத்தின் உயர்நிலையையும் கண்டு மகிழ்ந்தனர்.

அகவாழ்வு பற்றிய பாடல்கள் தலைவன்-தலைவி-தோழி என்ற மூவராலேயே பெரிதும் இயங்குகின்றன. தலைவன் ஊரறியத் தலைவியோடு வாழத் தொடங்கும் வகையில் அவன் அவளோடு பேசுவதற்குப் பெருந்துணையாக இருப்பவள் தோழி. தோழியின் துணைகொண்டே தலைவன் தன் பிற்கால வாழ்வை அமைத்துக் கொள்ள எண்ணுகிறான். அவ்வாறே தலைவியும் எண்ணுகிறாள். இடையூறுகள் ஏற்படும் போதெல்லாம் தோழியின் வாயிலாகவே தலைவன் தன் குறைகளைத் தெரிவிப்பான். தனக்கு உண்டாகும் துன்பங்களைத் தலைவி தோழியுடன் கூடித் தலைவனுக்கு அவள் உள்ளம்போலே அவன் உள்ளத்தை அறியாதவளாகப் பேசித்தெரிவிப்பாள். இம்முறையில் தன் குறையைத் தெரிவிப்பதாக அமைந்துள்ள பாடல்கள் குறுந்தொகையில் பல உள்ளன.

அவற்றைச் 'சிறைப்புறமாகக் கூறியது' என்று எழுதுவார் தொகுப்பாசிரியர். சிறைப்புறம் என்பது தினைப்புனத்துக்கும் வாழும் மனைக்கும் வெளியே என்ற பொருள் தரும். அதாவது தலைவன் தினைப்புனத்துக்கு வெளியே இருக்கையில் அவன் வரவை உணர்ந்தும் உணராதவர்களாய்த் தோழியும் தலைவியும் தம் குறைகளைக் கூறிக்கொள்வர். இங்ஙனம் நடிக்கும் நடிப்பு உயரிய பயனைத் தரவேண்டும் என்ற சிறந்த

அடிப்படையில் அமைவது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இத்தகைய சிறைப்புறக் கூற்றுக்களாய் அமைந்த பாக்கள் நல்கும் இன்பக் காட்சிகள் பல.

சிறந்த காட்சி ஒன்றைக் கொண்டு தலைவியின் கூற்றாய் அமைந்த குறுந்தொகைப் பாடல் ஒன்றைக் காண்போம்: —

அவள் நற்பண்புகள் சிறக்கப்பெற்றவள்; தான் கண்டு விரும்பிய வனுடன் தொடர்பு கொண்டு அவனன்றிப் பிற எதும் இல்லை என்னும் எண்ணத்தோடு வாழ எண்ணும் அளவில் தூய எண்ணம் கொண்டவள். தன்னைவிட அறிவாலும் அனுபவத்தாலும் சிறந்த தோழியின் துணைகொண்டு நாளும் தான் விரும்பியவனைக் கண்டு பேசி மகிழ்ந்து வந்தாள். இவ்வளவும் பெற்றோரும் மற்றோரும் அறியா நிலையில் நடைபெறுவன. தலைவன் தலைவி இருவருக்குமே இக் 'கள்ள' நட்பு, பிறர்க்குத் தெரிந்துவிட்டால் என்ன ஆகும் என்ற எதிர்கால விளைவுபற்றிய பயம் இருந்தது என்றாலும் இளமை வேகம் அவர்களை அதுபற்றி மேலும் எண்ணச் செய்யாது தடுத்தது. யாருமறியா நிலையில் பலநாள்கள் கழிந்தன. தன்னோடு பழகியவர்களுக்குத் தக்கவன் துணையாவன் துணையாவான் என்ற திட்டமான நம்பிக்கையால் தோழி பெரிதும் மகிழ்கின்றாள். தலைவியின் எல்லாச் செயல்கட்கும் இடமளித்துப் பெருந்துணையாய் இருக்கின்ற தோழியின் ஆலோசனை கேட்டு அவ்வாறே நடந்து வந்தாள்.

இவ்வளவு தற்காப்பு இருந்தும் அவர்கள் 'கள்ள' நட்பு, பெற்றவர்க்குத் தெரிந்துவிட்டது. நல்லமுறையில் வாழ்வதைக்கண்டு மனம் புழுங்கும் நிலையில் வாழ்ந்த பலர் அன்றும் இருந்தனர். தலைவன் தலைவியினை அன்பால் கூடும் நிகழ்ச்சிகளைக்கண்டு ஊரவர் பேச ஆரம்பித்தனர். தலைவியைக் குறை கூறினர். நேராக எதும் கூறத் துணிவு இல்லாதவர் அவளை முன்பின்னும் நடித்தும் பேசியும் தூற்றலாயினர். இது படிப்படியாகச் சிறுசிறு சொல்லாக இருந்து பெரிய பேச்சாகவே வளர்ந்துவிட்டது. பெற்றவர் இவ்வளவும் அறிந்தபின் பெண்ணைக் காக்க ஆரம்பித்துவிட்டனர். அவளைத் துணிந்து எவ்வித பயமும் இல்லாது அனுப்பியவர்கள் இப்போது இல்லம்விட்டு வெளிச் செல்லலாகாது என்று கட்டுப்பாடு அமைக்கத் தொடங்கி விட்டு

னர். இதுகாறும் சுதந்திர உணர்வுடன் விரும்பியவாறு சென்றுவந்த தலைவியை இனி எங்கும் செல்லலாகாது என்ற கட்டாயக் கட்டுப்பாட்டை அமைத்து விட்டனர் பெற்றவர், தம் மகள் பால் கொண்ட அன்பால், அவன் நல்வாழ்வில் கொண்ட கருத்தால்.

பெற்றவர் தம் காப்பினைக்கண்ட தலைவி தலைவனைக்காண முடியாதுளதே என்றெண்ணிக் கலக்கம் கொண்டாள்—தானும் அவனும் கண்ட அந்தத் தொடக்க நிலையை எண்ணிப் பார்த்து மீண்டும் மீண்டும் அந்தக் காட்சியைக் காணுவதில் ஆர்வம் கொண்டாள். 'கண்கள்' அறிமுகம் செய்துவைக்க வேறெதுவும் துணைபுரியாநிலையில் அவரோடு நட்புக்கொண்ட அந்தத்தொடக்கநிலையை எண்ணிப்பார்த்தாள். அவள் உள்ளம் மகிழ்ச்சியின் எல்லைக்குச் சென்றது. கண்களால் கொண்ட நட்பு எவ்வெவ்வாறு வளர்ந்தது என்பதை எண்ணினாள்—பெற்ற இன்பம் குறித்துப் பெருமிதம் கொண்டாள். இரவிலும் பகலிலும் தன்னைக்காண, வழியில் உள்ள ஏதங்கள் ஏதும் எண்ணாது வந்து தன்னைக்கண்டு இன்பவுரையாடி மகிழ்ந்து மீண்ட தலைவனைப் பற்றி எண்ணினாள். இப்போதுதான் அவள் எந்த உணர்ச்சியும் இல்லாத நிலை பெறுகிறாள். இந்நிலையும் சிறிது நேரம்தான். மீண்டும் அவலம் கொள்ளுகின்றாள் ஆற்றைக்கடந்து, வனவிலங்குகட்குத் தப்பி, இருளுக்கஞ்சாது, அரவுகளைத் தாண்டிவரும் தலைவன் மரத்தடியில் தன்னைக்காணாது என்னென்ன எண்ணுவானோ என்று எண்ணிப் பெருமூச்சு விடுகிறாள். என்ன செயல்முறைகளை மேற்கொண்டால் அவனைப்பெறமுடியும் என்ற சிந்தனைக்குச் செல்கின்றாள். அவனுக்கும் தனக்கும் நட்பினை வளரச் செய்த தோழியே இதற்கும் துணை புரியவேண்டும் என்ற முடிவு கொண்டாள். என்றோ ஒருநாள் கண்ட காட்சி நினைவுக்குவரவே, அதனை அடுத்து எண்ணி அக்காட்சியின் அடிப்படையில் தன நிலையைக் கூறித் தோழியின் துணை பெற விரும்புகின்றாள் தலைவி. இந்த நிலையில் தலைவி தோழியிடம் பேசுகிறாள்:-

“அன்பை எங்களிடம் வளர்த்து அது அழிவுறா வண்ணம் அமையுறச் செய்தவளே, இந்தக் கண்களால் நான்பெற்ற அன்பால் விளைந்த தீ என் உடலையே எரித்தாலும் அவரிடம் விரும்பிப் போகும் நிலையும் விரும்பிச் சென்று அளவளாவும் நிலையும், முன்பு

தண்ட இடத்தே காணும் நிலையும் இல்லாது போயிற்றே என்பதற்காகப் பெரிதும் வருந்துகிறேன். இந்தநிலையில் யான்பெற்ற பெருந்துயரை நம்மிடம் வந்து நீக்கும் நிலை அவர்களுக்கும் இல்லையே! இடைபுகுந்து என் இடர் களையும் எண்ணம் எவர்க்குமே இல்லையா? தோழி? யான்பெற்ற நோய் பிரிப்பாரற்ற நிலையில் சண்டைசெய்து சலிக்கும் நிலையில் பிரிந்து விடும் குப்பைக் கோழிகளைப் போல, உணர்வற்ற காரணத்தால் நீக்கமுடியாததாய் இருந்து தானே அழியத் தான் வேண்டும் போலும்" என்று கூறுகிறாள் தலைவி.

இதனால் தோழி தனது செய்தியைத் தாய்க்குக் கூறித் தனது வாழ்வை வளமுற அமைக்கவேண்டும் என்ற தனது துணிந்த கருத்தைக் குறிப்பாகக்கூறினாள். இப்பாடலுக்கு உரைவகுத்த தொகுப்பாசிரியர் "காப்பு மிகுதிக் கண், தோழி அறத்தோடு நிற்பாளாகத் தனது ஆற்றாமை தோன்றத் தலைமகள் கூறியது"

[நிற்பாளாக—நிற்கும் பொருட்டு] என்று எழுதியுள்ளார். இதனால் தலைவி தன் விருப்பத்தைப் பெற்றவரிடம் நேரில் கூறமுடியாததால் (வெட்சம் காரணமாக) தோழியின் துணையை நாடுகிறாள என்பது தெளிவாகிறது.

தலைவி தோழியின் துணையை நாடும் முறை நம் உள்ளத்தைக் கவர்கின்றது.

"என் குறையறிந்து தீர்க்க அவரில்லை. தீர்க்கும் எண்ணமும் இவர்க்கில்லை. இடைபுகுந்து என்குறை போக்கும் கருத்து எவர்க்குமே இல்லையா தோழி!" என்று கேட்கும் தலைவியுடன் நாமும் பரிதாப நிலையில் இணைகின்றோம். இந்த நிலையில் உருக்கமாகக் கேள்வி அமைக்கும் தலைவி கூறும் குப்பைக்கோழியின் காட்சியோ சிறப்பாக உள்ளது.

இரண்டு கோழிகளைச் சண்டைக்கென வளர்த்துச் சண்டை செய்ய விடுவர். ஒன்றையொன்று தாக்கி, தாக்கலால் தளர்ச்சியுறும் போது, உரியவர் தமது கோழியை அணைத்து ஆதரவுதருவர். வேறு மிகுதியாயின் சண்டையை அத்துடன் நிறுத்தி மீள்வர். இக் கோழிச் சண்டை கோழிகட்கு உரியவரின் பார்வையுடன் நடப்பது;

ஆனால் யாருக்கும் உரிமையில்லை; இரண்டு கோழிகள்—குப்பைமேட்டில் மேய்ந்த கோழிகள் ஒன்றையொன்று மோதிச் சண்டை செய்கின்றன. என்றால், அவற்றை விரும்பிப் பார்ப்போரும், துயர் அறிந்து களையும் எண்ணமும் ஆர்வமும் கொண்டோரும் குறைவாகவே இருப்பர். கோழிகள் இரண்டும் தாமே தளர்வுறும்வரை சண்டை செய்து பின்னர் அமைதியுறும் நிலைபெறும். இந்த அரிய காட்சியைக் கூறித் தலைவி, “குறை உணர அவரில்லை—உணர என் பெற்றவர்கள் முன் வரார்—உணர்ந்து உரியவர்க்கு உணர்த்த எவருமே இல்லை” என எண்ணி வருந்துவது மிகமிகச் சிறந்துள்ளது.

இவ்வரிய காட்சியைப் பாடலிலிருத்திப் பாட்டிசைத்துத் தந்த புலவர்தம் பெயர் தெரிந்திலது. தாம்கண்ட குப்பைக்கோழியின் சண்டையினை அமைத்துப் பாடவேண்டும் என்ற பெருவிருப்பம் கொண்ட புலவர் தம் பெயர் பின்னர் விளங்கவேண்டா என எண்ணி மறைந்தனரோ, அன்றி இருந்தபல பெயர்களும் ஏடுகளும் மறைந்தன போல மறைந்ததோ தெரிந்திலது. ஆயினும் தொகுப்பித்தவர் இக் கவிஞர் தம் சிறப்புக் காட்சியை மனத்திருத்திக் குப்பைக்கோழியார் என ஆசிரியருக்குப் பெயரிட்டுத் தம் ஆர்வத்தைத் தீர்த்துக் கொண்டார்.

“கண்டர வந்த காம வொள்ளெரி
என்புற நலியினு மவரொடு பேணிச்
சென்றுநா முயங்கற் கருங்காட் சியமே
வந்தஞர் களைதலை யவராற் றலரே
உய்த்தனர் விடாஅர் பிரித்திடை களையார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியி னல்லது
களைவோ ரிலையா னுற்ற நோயே” —(குறுந்தொகை 305)

உ

## 1956-ஞ ஜூலை-மீ 2உ (துர்முகி ஞ ஆனி மீ 19உ) இரவு 8 மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் காரியநிர்வாகசபைத் தீர்மானங்களின் விவரம்.

1 மகா-ா-ா-ஸ்ரீ SIR. P. T. இராசன் அவர்கள்-(உப-அக்கிராசனாதிபதி) மதுரை.

2 ,, V. ஷண்முகசுந்தரம் அவர்கள், M,A., B.L,–(காரியதரிசி) மதுரை.

3 ,, A ரெங்கசாமி அய்யங்கார் அவர்கள் அட்வகேட், [illegible] நாதபுரம்

4 , N இராமசாமி அய்யங்கார் அவர்கள் அட்வகேட், மதுரை

5 ,, N. S. சுந்தரவரதன் அவர்கள் B A., மதுரை

6 ,, S. பார்த்தசாரதி நாயுடு அவர்கள் B.A., B.L, அட்வகேட், மதுரை

7 ,, P. ரெங்கசாமி நாயுடு அவர்கள், B A., B L., அட்வகேட், மதுரை

8 ,, N. R கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் B A, B.L., மதுரை

—இவர்கள் வந்திருந்தார்கள்.

### தீர்மானங்கள்

1. 1955ஞ ஆகஸ்டுமீ முதல் 1956ஞ மேமீ முடிய மாதாந்தக் கணக்குகளும் 1955-1956-ம் ஆண்டு கணக்குகளும் அங்கீகரிக்கலாயிற்று.

2. 1956-1957ஞத்திய வரவு செலவு திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

3. ராஜபாளையம் ஸ்ரீ R. G. நல்லகுற்றாலம்பிள்ளை, நரசிங்கபுரம் ஸ்ரீ N. R. ஊரான், அனுராதபுரம் சைவப்புலவர் அ. ஈ. ஏகாம்பரம் இவர்கள் சங்கத்து அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள்.

4. சங்கத்தில் உபயோகமில்லாத அச்சாபீஸ் சாமான்களை விற்கவும், புதுமாதிரி மெஷின்களை வாங்கவும் ஸ்ரீ K. பழனியப்பன் அவர்களைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. கலாசாலை விஷயம்:—

1. தமிழ்ச்சங்கத் தேர்வுகளுக்காகச் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வுப்பாடத் திட்டங்களையும் அவற்றிற்கு மேலும் சிறப்பாக உள்ள பாடத்திட்டங்களையும் அமைக்க வேண்டும் என்பது.

2. தமிழ்ச்சங்கம் நடத்திவரும் கீழ்க்கண்ட தேர்வுகளுக்கு முறையே பெயர்கள் மாற்றப்படவேண்டும் என்பது.

| இப்பொழுது உள்ள பெயர். | மாற்றப்பட்ட பெயர். |
|---|---|
| பிரவேச பரீட்சை ... ... | நுழைவுத் தேர்வு |
| பால பண்டிதம் ... ... | இளம்புலவர் |
| பண்டிதம் ... ... | புலவர் |

3. கீழ்வரும் உறுப்பினர்களைக் கொண்ட பாடத்திட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தேர்வுக்குழுவாகவும் செயலாற்றும்.

தலைவர்—திரு. பி. டி. இராசன்

துணைத் தலைவர்—திரு. என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார்

உறுப்பினர்— ,, ஆ. கார்மேகக்கோனார்

,, டாக்டர். இராசமாணிக்கனார்

,, அ. கி. பரந்தாமனார்

,, நா. அப்பனையங்கார்

,, வி. சண்முகசுந்தரம்

,, அ. பி. முகம்மது சுல்தான்

,, கி. பழநியப்பன்

6. கலாசாலை வகுப்புகள் காலை 7-மணி முதல் 9-மணி வரையும் மாலை 6½-மணி முதல் 8½-மணி வரையும் நடத்தத் தீர்மானித்துள்ளது.

7. ஒவ்வொரு மாணவரிடமும் மாதமொன்றிற்கு, சட்டணம் ரூபாய் மூன்று வசூலிக்கப்படும்.

8. 1956 ஆகஸ்டு மாதம் முதல் தேதி கலாசாலை தொடங்கப் பெறும்.

9. புதிய ஆசிரியர் ஒருவரை (ரூபா 75 + ரூபா 15க்கு) நியமிக்க முடிவு செய்துள்ளது.

2—7—56
மதுரை

P. T. இராசன்,
(அக்கிராசனம் வகித்தவர்.)

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்படும் புத்தகங்கள்.

## I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) ... ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கணுநால் (5) இனியநாற்பது (உரை) ... ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... .. ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் ... ... ... | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுச்சந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் ... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா ... ... ... | 0 | 8 | 0 |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 32. | மனீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ... | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு... ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜனி ... ... ... | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 |
| 70. | திருச்சிறுபுலியூருலா ... ... ... | 0 | 12 | 0 |
| 71. | துணைத்தலைவர் நினைவுமலர் ... ... ... | 0 | 10 | 0 |

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 51 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by T. N APPAN IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.